**Friday Sermon/ வெள்ளிக்கிழமை குத்து.்.பா**

**(14 July 2017 / 19 Shawwal 1438 Hijira)**

# COMMENTARY OF SURAH AT- TIN (CH : 95) PART – 1

## சூர : அத்தீன் ஒரு விளக்கம் (அத்தியாயம் :95) பகுதி-1



## HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

சலாமிற்கு பிறகு தஸ்ஹுதும் தஅவசும் அல்.்.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு தம் உரையினை ஆரம்பித்தார்.

1. அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்

2. **அத்தியின் மீதும் ஒலிவ மரத்தின் மீதும் சத்தியமாக!**
3. **ஸீனாய் மலையின் மீதும் சத்தியமாக!**
4. **அபயமளிக்கும் இந்த நகரத்தின் மீதும் சத்தியமாக!**
5. **நாம் மனிதனை மிக அழகிய வடிவில் படைத்தோம்.**
6. **பின்னர் அவனை இழிந்தவனிலும் மிக்க இழிந்தவனாக்கினோம்.**
7. **நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்தோரைத் தவிர அவர்களுக்கு முடிவு இல்லாத நற்கூலி உண்டு.**
8. **இதன் பின்னர் நியாயத்தீர்ப்பு நாளைப் பற்றி உம்மால் எப்படிப் பொய்யெனக் கருத முடியும்?**
9. **தீர்ப்பளிப்போரில் அல்லாஹ் மிக மேலான தீர்ப்பளிப்பவனில்லையா?**

**(95 : 1 – 9)**

மேல் கூறப்பட்ட வசனங்களின் அடிப்படையில் நாம் சிந்தித்தால் இந்த பிரபஞ்சத்தில் படைக்கப்பட்டடிருக்கும் அனைத்தும், மனிதனின் தேவையை பூர்த்திகரிப்பதற்கு படைக்கப்பட்டிருக்கின்றது என்பதை நமக்கு உணரயியலும். அல்லாஹ் மனிதனை படைத்திருப்பது முற்றிலும் சிறந்த நிலையில் என்பதை, இறை வெளிப்பாடுகள் மூலம் நாம் புரிந்து கொள்கின்றோம். அதைப் போன்றே மனிதன் இழிவடைந்தால் விலங்குகளை விட இழிவடைந்தவனாக மாறிடுவான் என்பதையும் நமக்கு புரிந்து விடலாம். அதைப் போன்றே, மனிதனுக்கு நல்லொழுக்க பரமாகவும், ஆன்மீகமாகவும் முன்னேற்றமடையவும் முடியும் என்பதையும் நாம் சிந்தித்தால் புரிந்து கொள்ளலாம். மட்டுமின்றி மிக உன்னதமான நிலையை அடைவதற்கும் இறை சன்னிதியில் எட்டிடுவதற்கும் மனிதனுக்கு முடியும். அந்நிலையை மனிதன் அடைந்தால் அல்லது அவர் முழுமைப் பெற்றுவிடும் விஷயத்தில் வெற்றியடைந்தால், அல்லாஹ் ஏகன் என்றும் இவ்வுலகிலும் இப்பிரபஞ்சத்திலும் காணும் அனைத்தும், தாம் கூட அல்லாஹ்வுடையது மட்டும் என்றும் அந்நேரம் அவர் சுயம் உணர்ந்துக் கொள்வார். அவர் அல்லாஹ்வை திருப்தியடைய செய்வதற்கும் அவனது அருகாமையை அடைவதற்கும் கடினமான முயற்ச்சிகளை மேற்கொள்வார். அல்லாஹ்வை அடைவதற்காக அத்தகை கடின முயற்ச்சிகளை அவர் மேற்கொள்ளும் பொழுது அவரது உள்ளத்தில் இறைவன் மீதான அன்பு, மதிப்பு, பயம் போன்றவை முளைத்துக் கொள்கின்றது. இத்தகை விஷயங்கள், மிருக குணங்களிலிருந்து அவருக்கு மீட்சியை அளிப்பதோடு நல்லொழுக்கமும் ஆன்மீகமுமான நிலையின்பால் அது அவரை கொண்டு செல்லவும் செய்கின்றது. அத்தகையிலான ஒரு நிலையினை அவர் சுயம் அடையும் பொழுது, அதாவது அவரது நல்லொழுக்க தன்மையை மேலும் விரிவாக்கிக் கொள்ளவும் பாதுகாத்துக் கொள்ளவும் செய்யும் பொழுது அவர் ஒரு நேர்மையாளராக பரிணமித்துக் கொள்கின்றார். மேலும் நன்மையைக் கொண்டும் ஞானத்தைக் கொண்டும் செயலாற்றிக் கொள்வது மூலம் அவருக்கு தம் இலட்சியத்தை அடைவதற்கு, அத்தகை செயல்கள் உதவிபுரிகின்றது. அல்லாஹ்வன்றி மற்றெவரும் அவரது இதயத்தைக் குறித்து அறிவதில்லை. அல்லாஹ்விடமிருந்து

எதை ஒன்றும் அவருக்கு மறைத்து வைப்பதற்குமில்லை. விதிநாளில் அல்லாஹ் தான் முற்றிலும் சிறந்த தீர்ப்பளிப்பவனாகயிருக்கின்றான். அவர் மீதான விதியினை அன்று அவன் கூறிக் கொள்கின்றான். **இனி ஒருவேளை அவரது இதயம் நேர்மையில்லாமல் இருந்ததுயென்றால், மக்களின் முன்னால் நல்லவர் என காட்டிக் கொள்வதற்கே அவர் நற்செயல்களை புரிந்தார் என்றால் அந்நேரம் அவரது தண்டனை மிக கடினமும் வேதனைக்குரியதுமாகயிருக்கும். ஆனால் அல்லாஹ்விடம் அவர் நேர்மையாக இருந்திருந்தார் என்றால், அவரது இதயம் சுத்தமும் தூய்மையுமாகவேயிருந்தது என்றால் அந்நேரம் அவரது நற்கூலி அல்லாஹ்வின் பார்வையில் கொஞ்சநஞ்சமல்ல. அவருக்கு கிடைக்கும் பிரதிபலன் நல்லதும் முடிவில்லாததுமாகயிருக்கும். அவருக்கு அதில் மகிழ்ச்சியடையவும் முடிகின்றது.**

அல்லாஹ் மனுகுலத்திற்கு அவர்கள் சுயம் விரும்பும் பாதையை தேர்ந்தெடுப்பதற்கான சுதந்திரம் அளித்திருக்கின்றான். இந்த தற்காலிகமான உலக கவர்ச்சிகளுடன் இணைந்து, ஒரு விலங்கினை விட மோசமான செயல்களில் கூட தேவையென்றால் நமக்கு ஈடுபட்டுக் கொள்ளலாம். அல்லது நமக்கு தேவையென்றால் இவ்வுலகின் கவர்ச்சிகளையாவும் தவிர்த்துக் கொண்டு அல்லாஹ்விடம் திடமான நட்பை வைத்து வாழ்ந்துக் கொள்ளவும் செய்யலாம். அவ்வாறு நமக்கு முன்னேற்றத்தின் பாதையை தேர்ந்தெடுத்து, நல்லொழுக்கமும் ஆன்மீகமுமான மேன்மையை அடைந்து, ஆன்மாவுக்கு தேவையானதை பாகப்படுத்தியெடுப்பதற்கும் முடிந்துவிடும். அல்லாஹ்விற்கு பரிபூரணமாக கீழ்படிந்துக் கொள்வதன் வாயிலாகவே நல்லொழுக்கமும் ஆன்மீகமுமான உன்னத பதிவினை நாம் அடைந்துக் கொள்வது. அந்நேரம் அல்லாஹ், சுயம் (நமக்கு முன்னால்) எந்த நேரமும் எந்த மணிநேரமும் வெளிப்பட்டுக் கொள்வான். அல்லாஹ்வின் கயிற்றை நாம் உறுதியுடன் பிடித்துக் கொள்ள வேண்டும். அவனது அறிவுரைகளை நாம் பின்பற்ற வேண்டும். அவனது வழியினை நாம் விடாமல் பின் தொடர்ந்துக் கொள்ள வேண்டும். அவ்வாறே ஆனால் அல்லாஹ் நம்மிடம் திருப்தியுடையவனாகவும் நாம் அல்லாஹ்வின் மீது திருப்தியுடையவராகவும் பரிணமித்துக் கொள்வோம்.

**மனிதனுக்கு விலங்கைவிட மேலான பதவியை அளிக்கப்பட்டிருக்கின்றது. மனிதனுக்கு சிந்தித்துச் செயல்படும் தன்மையுண்டு. அவருக்கு தீர்மானங்கள் கைகொள்வதற்கான ஆற்றல் உண்டு. ஆனால் விலங்குகளுக்கு அதன் விருப்பங்கள் மட்டுமே உள்ளது. எனவே மனிதனுக்கு இறைவன் அளித்திருக்கும் திறமைகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது பகுத்தறிவுத்தன்மை புலனாய்வு(reasoning power, his intelligence) போன்றவை, ஆகவே மனிதன் அத்தகை திறமைகளை பயன்படுத்தி, மிருகநிலையிலிருந்து மீட்சியை பெற்று, முன்னேற்றத்தின் பாதையினை தேர்ந்தெடுத்து முடிவில் தூய்மையுடையவும் நல்லொழுக்கத்தினுடையவும் ஆன்மீகத்தினுடையவும் உன்னத பதவியினை அடைந்திடவும் செய்யலாம். இந்த நிலையை, ஒரு நொடியிலோ ஒரு நிமிடத்திலோ ஒரு நாளிலோ அடைய முடியாது. இச்செயல்களை நிரந்தரம்**

**தொடர்ந்துக் கொள்ள வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக இறையருகாமையைக் குறித்து உணர வேண்டும். அவ்வாறு சிறிதளவிலான அய்யம் கூட இல்லாத நிலையில் இறைவன் மீதான நம்பிக்கையை திடப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அவனது நியாயத்தீர்ப்பின் பால் திட ஞானம் பெற்றுக் கொள்ள வேண்டும். அந்நிலையில் நிச்சயமாகவும் அல்லாஹ் நிகரற்ற ஒருவன் என்ற உண்மையின் பால் நமக்கு எட்டிடமுடிந்து விடும்.**

பகுத்தறிவுத் தன்மை, புலனாய்வு இவை அல்லாஹ்வின் பரிசாகும். அதன் உதவியைக் கொண்டே சரியும் தவறும் நாம் பகுத்தறிந்துக் கொள்வது. அல்லாஹ் திருமறை மூலமாக வழங்கியிருக்கும் கட்டளைகளை உணரயியலுவதும் அது மூலமேயாகும். அந்த திருமறை வாயிலாக அல்லாஹ் நம்மை கற்பிக்கின்றான்.

நம் புத்திசக்தியையும் அறிவையும் பயன்படுத்திக் கொண்டால், அல்லாஹ்வின் கட்டளைகளை பகுத்தறிந்துக் கொள்வதற்கு அவன் வழிவகுப்பான். அந்த பரிபூரணமான போதனைகளுக்கு ஏற்றவாறு நமக்கு முன்னேற்றத்தையும் அடைந்துவிடலாம்.

இந்த சூரத்தின் சாரம்சம் 5 முதல் 9 வரையிலான வசனங்களில் நமக்கு காணலாம். (4) பரிசுத்த சான்றுகளைக் கொண்டு சத்தியம் செய்தவாறாகும் இதை சமர்ப்பித்திருப்பது. அதாவது அத்தி, ஒலிவு, சினாய்மலை, பரிசுத்தமக்கா நகரம். முதல் சான்றாகிய அத்தியின் விளக்கம் இவ்வாறாகும்.

1. **Wat-Tiini waz-Zaytuuni (அத்தியின் மீதும் ஒலிவு மரத்தின் மீதும் சத்தியம்)**

   **a)** அத்தி : அத்தி என்ற வார்த்தையை நாம் பரிசோதித்தால் பொருளின் அடிப்படையில் அதை அத்திப்பழம் என கூறிக்கொள்ளலாம். மற்றொரு அர்த்தம் அத்திப்பழ மரம் என்றாகும். அதாவது அத்தி, மனிதனின் பல்வகைப்பட்ட தீர்ப்பை குறிப்பிடுகின்றது. இதை மிக நல்ல நிலையில் பாதுகாத்துக் கொண்டால் அது நல்ல நிலையில் வளர்ந்துவிடும். அப்போது அதிலிருந்து முற்றிலும் சிறந்த பழங்களை பெற்றுக் கொள்ளலாம். மற்று பழங்களை ஒப்பிட்டுப்பார்த்தால் இது சுவை மிக்கதும் ஊட்டமளிக்கக் கூடியதுமாகும்.

இதன் பழத்தை (அத்தியின்) நாம் பாதுகாத்து பராமரிக்காமலிருந்தால் (இதன் விதை மிக சிறிதானதாகும்). ஏராளமான பூச்சிகள் இதை தாக்கிக் கொள்ளும். இதைப் போன்றே மனிதனுக்கும் ஒரு நல்ல முடிவை சுயம் உருவாக்கிக் கொள்ள ஆகும். அதாவது அவரிடமுள்ள நன்மையை பாதுகாத்து பராமரிக்க முடிந்துவிட்டால்! ஆனால் அவர் அவரிடமான எல்லா தீமைகளையும் பாதுகாத்து பராமரித்தால் அவர் ஒரு மோசமான உயிரினத்தைப் போன்று மாறிவிடுவார். அவரது நிலை பலவீனமடைந்து விடவும் மேலும் அவர் ஒரு விலங்கைவிட இழிவான நிலைக்கு ஆளாகிவிடவும் செய்வார். மற்றொரு தரத்தில் கூறினால் அவரை விட எவளவோ மேன்மையுடையதாகயிருக்கும் விலங்கு!

இப்பாடத்தை மக்களுக்கு கற்பிப்பதற்காக ஈசா(அலை) அவர்கள் ஒரு அத்திமரத்தை சபித்துக் கொண்டதாக ரிப்போர்ட் செய்யப்பட்டிரக்கின்றது. அந்த அத்திமரத்தில் இலைகள் மட்டுமே இருந்தன. பழங்கள் இல்லாமலிருந்தது. (மத்தேயு 21 : 18-20)

### b) And by the Olive (ஒலிவின் மீது சத்தியம்)

ஒலிவு மரம், ஒரு தூய்மையான சான்றாகின்றது. திருக்குர்-ஆனில் அத்தியாயம் 23-ல் சூரா : அல் மும்மினூனில் 21ம் வசனத்தில் அல்லாஹ் அத்தகை பழங்களின் வளர்ச்சியை சீனா மலையில் உற்பத்தி செய்து இயலச் செய்தான். (அதாவது ஒலிவு மரத்தின் பழங்கள்) அதிலிருந்து தயாரித்துக் கொள்வது முற்றிலும் சிறந்த எண்ணையாகும். அதற்கு சிறப்பான சுவையும் வாசனையும் உள்ளது.

சூரா: அன்னூரில் (அத்தியாயம் 24 வசனம் 36)அல்லாஹ் உவமை வடிவில் வர்ணிக்கின்றான் இறையொளியை ஒலிவு எண்ணையுடன் தொடர்பு படுத்திக் கொள்கின்றான். அதன் பழத்தையும் அவ்வாறேயாகும். அதன் எண்ணையினை வெளிச்சம் வழங்கும் ஒரு நட்சத்திரமாக உவமைப்படுத்துகின்றான். அதன் ஒளி ஒரு பொழுதும் கெடுவதில்லை. அந்த ஒளியை குர்-ஆனின் ஒளியுடன் உவமைப்படுத்தப்பட்டிருக்கின்றது. அது வெளிப்பாடுகள் வாயிலாக கிடைத்ததாகும். அது தூயதூதரின் மகத்துவத்தை வெளிப்படுத்திக் கொள்வதாகும். அந்த நூல் ஒரு வழி காட்டியாகும். அது ஒரு காலகட்டத்திற்கு மட்டுமானதல்ல. வரும் காலத்திற்கு அது வழிகாட்டியாகும் அது இறுதிநாள் வரையிலும் தொடர்ந்துக் கொள்ளும். இதன் போதனைகள் அனைத்து உலகிற்கானதுமாகும். பூமியில் இருக்கும் அனைத்துக்கும் அது வழிகாட்டியாகும். இதன் ஒளி எங்கெல்லாம் எட்டுகின்றதோ அங்கெல்லாம் அதை பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த சூரத்தின் விளக்கம் மிக விரிவானதாகும். இன்ஷா அல்லாஹ்! இதன் விளக்கத்தை வருகின்ற வெள்ளிக்கிழமையும் தொடர்ந்துக் கொள்வேன். இந்த விளக்கத்தை மிக நல்ல நிலையில் உணர்ந்துக் கொள்வதற்கு அல்லாஹ் நமக்கு உதவி புரிவானாக! அவ்வாறேயானால் அல்லாஹ்வின் உவமைகளின் உண்மையான நிலையை, அவன் திருமறை மூலம் நம்மை கற்பித்த நிலையில் தான் இந்த சூரத்தை உணர்ந்துக் கொள்வதற்கு முடிந்துவிடும். நல்லொழுக்க பரமாகவும் ஆன்மீக பரமாகவும் முழுமையடைய அவன் நமக்கு உதவி புரிவானாக! அவ்வாறேயானால் நமக்கு மிருக நிலையிலிருந்து வெளியே வந்து மேலும் மேலும் மேன்மையடைவதற்கும் நம் ஆன்மாவை பரிபூரணமான நிலையில் எட்ட வைப்பதற்கும் அவ்வாறு அல்லாஹ்விடம் மேலும் மேலும் நெருங்கிக் கொள்வதற்கு நமக்கு முடிந்து விடும். இன்ஷா அல்லாஹ். ஆமீன்.

**ISSUED BY:**

Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 9789180817
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**TRANSLATED BY:**

*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817



Tamil Translator Azim Ahmad with Hazrat Khalifathullah Munir Ahmad Azim (as)